செ.வெ.எண்.

நாள்: 12.10.2023.

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சிப்பிரிவு)**

**இராமநாதபுரம்.**

**தகுதியான நபர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| பதவியின் பெயர் | : | வளரும் வட்டார திட்ட அலுவலர் (Aspirational Block Fellow) |
| பதவியின் எண்ணிக்கை | : | 1 |
| பணிக்கான இடம் | : | திருவாடானை, இராமநாதபுரம் மாவட்டம் |
| பணிக்காலம் | : | நவம்பர் 2024 வரை |

**தகுதிகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதாவது ஒரு பிரிவில் முதுகலை பட்டம் பயின்றிருக்க வேண்டும்.
2. தகவல்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் செயல்பாடுகளை விளக்கம் செய்யும் திறன் பெற்றிருக்க வேண்டும்.
3. சமூக வலைதளங்களை பயன்படுத்த தெரிந்திருக்க வேண்டும்.
4. திட்டங்களை நிர்வாகப்படுத்தும் திறன் பெற்றிருக்க வேண்டும்.
5. வளர்ச்சி தொடர்பான நிறுவனங்களில் வேலை செய்திருக்க வேண்டும்.
6. ஆங்கிலம் மற்றும் தமிழில் தொடர்பு கொள்ள தெரிந்திருக்க வேண்டும்.

**குறிப்பு:**

ஊரக வளர்ச்சி தொடர்பாக உயர்கல்வி பயின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**ஊதியம்:**

ரூ.55,000/- (மாத ஊதியம்) (வரி பிடித்தம் பொருந்தும்)

**வளரும் வட்டார திட்ட அலுவலருக்கான பணி மற்றும் கடமைகள்**

1. வளரும் வட்டார திட்ட பகுதிகளின் வளர்ச்சிக்கான செயல்பாடுகளை வடிவமைப்பு செய்தல் மற்றும் திட்டங்களை செயல்படுத்த வட்டார அளவிலான அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு தருதல்.
2. திட்டங்களை செயல்படுத்துதல், சவால்களை கண்டறிதல் போன்றவைகளுக்கான தொடர்ச்சியாக களங்களை பார்வையிடல்.
3. வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு வட்டார மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு தகவல்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஆதாரங்கள் அடிப்படையில் பரிந்துரைகளை கூறுதல்.
4. உள்ளூர் சமுக மக்களை மேம்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறைகள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், திறன் வளர்ச்சி பயிற்சிகள் செயல்படுத்துதல்.
5. சிக்கல்கள், சவால்கள் மற்றும் தேவை போன்றவற்றிக்காக மாநில மற்றும் NITI அளவில் இணைந்திருத்தல்.
6. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்படும் பிற பொறுப்புகள்.

விண்ணப்பங்களை மாவட்ட இணையதளமான https://ramanathapuram.nic.in-ல் பதிவிறக்கம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் (வளர்ச்சிப் பிரிவு), மாவட்ட ஆட்சியரகம், இராமநாதபுரம்-623503 என்ற முகவரிக்கு 31.10.2023-க்குள் அஞ்சல் வழியாக அனுப்பிட தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
இராமநாதபுரம்.

12.10.23